**அறிவித்தல் இல. R/2025/21**

## வடக்கு மாகாண பொதுச்சேவையின் இணைந்த சாரதிகள் சேவையின் மோட்டார் வாகன சாரதி தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2025

அமைச்சரவை அலுவலகத்தின் செயலாளர் அவர்களின் CP/DEC/25 இலக்க 2025.11.05ம் திகதிய கடிதம் மூலம் வழங்கப்பட்டுள்ள 2025.10.27ம் திகதிய அமைச்சரவைக் கூட்ட தீர்மானத்தின் பிரகாரம், பிரதம செயலாளரின் NP/01/02/07/01/01 இலக்க 2025.11.15ம் திகதிய சிபார்சுடனான பிரதிப் பிரதம செயலாளர் - நிர்வாகம், வடக்கு மாகாணம் அவர்களினது NP/02/01/RECRUITMENT/GENERAL இலக்க 2025.11.15ம் மற்றும் 2025.12.15ம் திகதிய கோரிக்கைகளுக்கு அமைவாக, வடக்கு மாகாண பொதுச்சேவையின் இணைந்த சாரதிகள் சேவையின் மோட்டார் வாகன சாரதி தரம் III பதவிக்கு சேவைப்பிரமாணக் குறிப்பில் விதித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளுக்கமைய பின்வரும் வகையில் காணப்படும் மாவட்ட ரீதியான **ஐம்பது (50)** வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சையானது, வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர் அவர்களால் 2026ம் ஆண்டு ஜனவரி மாதமளவில் நடாத்தப்படும் என அறிவிக்கப்படுகின்றது. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி **2026.01.12** ஆகும்.

**ஆட்சேர்ப்பிற்காக அனுமதிக்கப்பட்ட மாவட்ட ரீதியான வெற்றிடங்களின் தொகை கீழ் வருமாறு**

| இல | மாவட்டம் | வெற்றிடங்கள் |
|---|---|---|
| 01 | யாழ்ப்பாணம் | 25 |
| 02 | வவுனியா | 08 |
| 03 | முல்லைத்தீவு | 05 |
| 04 | கிளிநொச்சி | 06 |
| 05 | மன்னார் | 06 |

### 02. ஆட்சேர்ப்புக்கான சேவை நிபந்தனைகள் :

02.1 2013.07.01ம் திகதியிலிருந்து செயல்வலுப்பெறும் வகையில் வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் அவர்களால் அனுமதிக்கப்பட்ட இணைந்த சாரதிகள் சேவையின் மோட்டார் வாகன சாரதி பதவிக்குரிய சேவைப்பிரமாணக் குறிப்பில் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகள், அதில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களிற்கு அமையவும் தாபனவிதிக்கோவை ஏற்பாடுகள், நிதிப்பிரமாணங்கள் மற்றும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் **1817/30**ம் இலக்க **2013.07.03**ம் திகதிய அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட வடக்கு மாகாண அரச சேவைக்கான தாபன நடைமுறை ஒழுங்கு விதிக்கோவை, வடக்கு மாகாண நிதி ஒழுங்கு விதிகள் மற்றும் இப்பதவியுடன் தொடர்புபட்டு, காலத்திற்குக் காலம் வெளியிடப்படும் விதிகள், சுற்றறிக்கைகள், கட்டளைகள் ஆகியவற்றிற்கு உட்பட்டு, தெரிவு செய்யப்படும் பரீட்சார்த்திகள் குறித்த இணைந்த சாரதிகள் சேவையின் மோட்டார் வாகன சாரதி பதவியின் தரம் III இற்கு நியமிக்கப்படுவர்.

02.1 இப் போட்டிப் பரீட்சையின் மூலம் நியமனத்திற்கு தேர்வு செய்யப்பட்ட பரீட்சார்த்திகள், தமது நியமனத் திகதியிலிருந்து மூன்று (03) வருடங்களிற்கு தகுதிகாண் அடிப்படையில் **இணைந்த சாரதிகள் சேவையின் மோட்டார் வாகன சாரதி தரம் III** பதவிக்கு நியமிக்கப்படுவர். இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும். சேவைப் பிரமாணக்குறிப்பில் குறிப்பிடப்பட்டவாறு இணைந்த சாரதிகள் சேவையின் மோட்டார் வாகன சாரதி பதவியில் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட திகதியிலிருந்து **மூன்று (03)** வருட காலத்திற்குள் முதலாவது வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையில் சித்தியெய்திருப்பதுடன் வேலை, வரவு, நடத்தை திருப்திகரமாக அமைந்திருத்தல் வேண்டும்.

02.2 இச்சேவை இடமாற்றத்திற்குட்பட்ட சேவையாகும். இதனால் இந் நியமனம் பெறுபவர்கள் வடக்கு மாகாணத்தின் எப்பாகத்திலும் சேவையாற்ற வேண்டுமென்ற நிபந்தனைக்கும் கீழ்ப்படிதல் வேண்டும்.

02.3 ஒரு சேவை நிலையத்தில் நியமனம் பெறுபவர், அதே சேவை நிலையத்தில் குறைந்தது **ஐந்து (05)** வருடங்கள் தொடர்ச்சியாக சேவையாற்றுதல் வேண்டும் என்பது கட்டாய நிபந்தனையாகும். எனினும், சேவையின் தேவையின் அடிப்படையில், சேவை நிலையமானது நியமன அதிகாரியினால் மாற்றத்திற்கு உட்படுத்தப்படலாம்.

02.4 அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 18/2020 மற்றும் இது தொடர்பாக தொடர்ந்து வரும் சுற்றறிக்கைகள் என்பவற்றுக்கமைய நியமனத் திகதியிலிருந்து **மூன்று (03)** வருடங்கள் முடிவதற்கு முன்னர் குறித்துரைக்கப்பட்ட இரண்டாவது அரச கரும மொழியில் தேர்ச்சி பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.

02.5 திறந்த போட்டிப்பரீட்சை மூலம் நியமிக்கப்படவுள்ள ஆட்களின் மொத்த எண்ணிக்கை **ஐம்பது (50)** ஆகும். நியமனங்களின் எண்ணிக்கை மற்றும் நியமனம் அமுலுக்கு வரும் திகதி என்பன நியமன அதிகாரியினால் வரையறுக்கப்படும். எனினும் அறிவிக்கப்பட்ட இவ் வெற்றிடங்கள் தொடர்பில் பகுதியளவு வெற்றிடங்கள் அல்லது சகல வெற்றிடங்களையும் நிரப்பாது விடுவதற்கான அதிகாரத்தினை நியமன அதிகாரி கொண்டுள்ளார்.

02.6 எவ்வாயினும், மாவட்ட வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப, அம் மாவட்டத்திற்கு விண்ணப்பித்த, தகைமைகளை பூர்த்தி செய்த விண்ணப்பதாரிகளில் தகைமை பெற்றவர்கள் போதுமான எண்ணிக்கை இல்லாத நிலை ஏற்படுமிடத்து, ஆட்சேர்ப்புத்திட்டத்தின் 7.2.5.1 (i) இன் ஏற்பாடுகளுக்கமைய, அவ்வாறு குறித்த மாவட்டத்திற்கும் ஏனைய மாவட்டங்களுக்கிமையிலான துாரத்தினை கருத்தில் கொண்டு, நியமனத்தின் போது அடுத்து வரும் மாவட்டம் தீர்மானிக்கப்பட்டு அம்மாவட்ட வெற்றிடம் நிரப்பப்படும்.

## 03. சம்பள அளவுத்திட்டம் :

2025.03.25ம் திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 10/2025க்கு அமைவான, சம்பளத் தொகுதி **PL 3 - 2025**க்கு ஏற்ப **மோட்டார் வாகன சாரதி தரம் - III** பதவிக்கான திரட்டிய சம்பள அளவுத் திட்டமானது **ரூபா 42,780 - 10 x 490 - 10 x 540 - 10 x 590 - 12 x 630 - 66,540/-** ஆகும். (இவ் அளவுத்திட்டத்தின் நான்காவது படிநிலையை அடைய முன் முதலாவது வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையில் சித்திபெறல் வேண்டும்) எவ்வாறாயினும் மேற்படி சுற்றறிக்கையின் **அட்டவணை - III** இல் கூறப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக விதித்துரைக்கப்பட்ட சம்பளம் இப்பதவியின் பொருட்டு வழங்கப்படும்.

## 04. பொதுவான தகைமைகள் :

04.1 விண்ணப்பதாரி இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.

04.2 விண்ணப்பதாரி சிறந்த நன்னடத்தை உடையவராக இருத்தல் வேண்டும்.

04.3 விண்ணப்பதாரி வடக்கு மாகாணத்தை நிரந்தர வதிவிடமாகக் கொண்டவராக இருத்தல் வேண்டும். இவ் விண்ணப்ப முடிவுத்திகதிக்கு முன்னர் உள்ள ஆறு (06) ஆண்டு காலப்பகுதியில் ஆகக் குறைந்தது மூன்று (03) ஆண்டுகளாயினும் வடக்கு மாகாணத்தில் தொடர்ச்சியாக வசித்திருத்தல் வேண்டும். (**நேர்முகப் பரீட்சையின் போது** தமது நிரந்தர வதிவிடத்தினை உறுதிப்படுத்துவதற்கு வாக்காளர் பட்டியலின் பிரித்தெடுப்பிதழினை சமர்ப்பித்தல் வேண்டும்)

**அல்லது**

விண்ணப்பதாரர் அல்லது அவரது பெற்றோர் வடக்கு மாகாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்டிருப்பதுடன் ஆகக்குறைந்தது ஐந்து (05) வருடங்கள் வடக்கு மாகாணத்தில் தொடர்ச்சியாக வசித்திருத்தல் வேண்டும்.
(**நேர்முகப் பரீட்சையின் போது** தமது நிரந்தர வதிவிடத்தினை உறுதிப்படுத்துவதற்கு வாக்காளர் பட்டியலின் பிரித்தெடுப்பிதழினை சமர்ப்பித்தல் வேண்டும்)

04.4 விண்ணப்பதாரி விண்ணப்பத்தை ஏற்கும் **இறுதித் திகதியன்று அல்லது அதற்கு முன்னர்** இவ்விளம்பரத்தின் மூலம் தேவைப்படுத்தப்பட்ட சகல தகைமைகளையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

04.5 விண்ணப்பதாரி விண்ணப்பத்தை ஏற்கும் இறுதித் திகதியன்று **18 வயதிற்கு குறையாதவராகவும், 45 வயதிற்கு மேற்படாதவராகவும்** இருத்தல் வேண்டும்.

## 05 கல்வித் தகைமை மற்றும் ஏனைய தகைமைகள் :

### (05.1) கல்வித் தகைமைகள் :

அ) க.பொ.த (சா/த) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் மொழி (தமிழ் / சிங்களம்) உள்ளடங்கலாக **இரண்டு (02)** பாடங்களில் **திறமைச் சித்தியுடன் (C) ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.** இதில் **ஒரே அமர்வில் ஆகக்குறைந்தது ஐந்து (05) பாடங்களிலாவது** சித்திபெற்றிருத்தல் வேண்டும்.

### (05.2) தொழிற் தகைமைகள் :

மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்படுகின்ற 24 அந்தருக்கு **(CWT)** குறையாத ஸ்ரேசன் வெகன் வண்டிகளை மற்றும் தனிப்பட்ட / வாடகைக் காரினைச் செலுத்துவதற்கான செல்லுபடியான வாகன சாரதி அனுமதிப் பத்திரத்தினை கீழ்வரும் வகையில் பெற்றிருத்தல் வேண்டும்.

a) ஆட்சேர்ப்புக்கான விண்ணப்ப முடிவுத் திகதிக்கு குறைந்தபட்சம் 03 வருடங்களுக்கு முன்னர்

i. பழைய நடைமுறையின் கீழான வாகன வகுப்பு **"C"** மற்றும் **"C1"** ஐக் கொண்டிருத்தல்.

**அல்லது**

ii. புதிய நடைமுறையின் கீழ் வாகன வகுப்பு **"B"** ஆகியவற்றினைச் செலுத்துவதற்குரிய வாகன சாரதி அனுமதிப் பத்திரத்தினை பெற்றிருத்தல் வேண்டும்.

b) பெருந்தெருக்கள் சட்டக்கோவை தொடர்பாக போதிய அறிவைக் கொண்டிருத்தல் வேண்டும்.

### (05.3) சேவை அனுபவம் :

விண்ணப்ப முடிவுத் **திகதியில்** மோட்டார் வாகன ஓட்டுநராக **மூன்று (03) வருட அனுபவத்தைக்** கொண்டிருத்தல் வேண்டும். (இச் சேவை அனுபவமானது, சான்றிதழ்களின் மூலம் உறுதிப்படுத்துதல் வேண்டும்)

### (05.4) உடற் தகைமை :

a) விண்ணப்பதாரி குறைந்தபட்சம் **5'** (அடி) 2.5" (அங்குலம்) (158.75cm) உயரமுடையவராக இருத்தல் வேண்டும்.

b) பகல் மற்றும் இரவு நேரங்களில் தனது கடமையினை மேற்கொள்ளும் பொருட்டான சிறந்த கண்பார்வையினைக் கொண்டிருப்பதுடன், சிறந்த உடல், உள ஆரோக்கியத்தினையும் கொண்டிருத்தல் வேண்டும். (நேர்முகப் பரீட்சையின்போது அரச மருத்துவ அதிகாரியினால் வழங்கப்பட்ட சான்றிதழ் மூலமாக இவற்றினை உறுதிப்படுத்துதல் வேண்டும்)

## 06 ஆட்சேர்ப்பு முறை :

06.1 சேவைக்கான ஆட்சேர்ப்பு பிரதிநிதித்துவ அடிப்படையில் மேற்கொள்ளப்படும். வடக்கு மாகாணத்தின் ஒவ்வொரு மாவட்டத்தினதும் சனத்தொகை விகிதாசாரத்திற்கு ஏற்ப ஒவ்வொரு மாவட்டத்திற்குமுரிய வெற்றிட எண்ணிக்கை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(i) குறித்த மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட வெற்றிடங்களின் எண்ணிக்கையினை அதே மாவட்டத்திற்கு விண்ணப்பித்த தகைமைகளைப் பூர்த்தி செய்த விண்ணப்பதாரர்களினால் நிரப்புவது சாத்தியப்படாத சந்தர்ப்பங்களில் மாவட்டத்தின் சனத்தொகையின் விகிதாசாரத்திற்கேற்ப மாகாணத்திற்குள் வரும் அடுத்துள்ள மாவட்டங்களுக்கிடையில் வெற்றிடங்களின் எண்ணிக்கை மீள்பகிர்வு செய்யப்படும்.

(ii) நியமிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள மொத்த வெற்றிடங்களின் எண்ணிக்கை மிகக் குறைவானதாக இருப்பின் மாவட்டத்தின் சனத்தொகையை அடிப்படையாகக் கொண்ட தெரிவு முறையினை பிரயோகிக்காது திறமை ஒழுங்கின் அடிப்படையில் தகுதியானவர்கள் தெரிவு செய்யப்படுவர்.

(iii) பரீட்சையில் தேர்ச்சியடைவதற்கான ஆகக் குறைந்த புள்ளிகளைப் பெற்றவர்களின் எண்ணிக்கையானது, நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கையை விட குறைவாகக் காணப்படுமிடத்து, மாவட்டத்தின் சனத்தொகை அடிப்படையில் தெரிவுகள் மேற்கொள்ளப்படமாட்டாது.

06.2 ஒரு விண்ணப்பதாரி, ஒரு மாவட்ட வெற்றிடத்திற்கு மட்டுமே விண்ணப்பிக்க அனுமதிக்கப்படுவர். விண்ணப்பதாரி வட மாகாணத்தில் எம்மாவட்டத்தையும் நிரந்தர வதிவிட மாவட்டமாக கொண்டிருப்பினும் தான் விரும்பிய மாவட்டத்தை நியமனத்தை எதிர்பார்த்து விண்ணப்பிக்க முடியும். நியமனத்தை எதிர்பார்த்து விண்ணப்பித்த மாவட்டம் பின்னர் மாற்றம் செய்ய அனுமதிக்கப்படமாட்டாது.

இந்த வகையில், யாதாயினும் ஒரு மாவட்டத்தில் நிரப்பப்பட வேண்டிய வெற்றிடங்களின் எண்ணிக்கைக்காக போட்டியிடுவதற்கு அம் மாவட்டத்தில் விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் மாத்திரமே தகுதி பெற்றவர்களாவர்.

**நியமனத்திற்காக தெரிவுசெய்யும் மாவட்டம் மற்றும் மாவட்ட இலக்கம் வருமாறு :-**

| மாவட்டம் | மாவட்ட இலக்கம் |
|---|---|
| யாழ்ப்பாணம் | 01 |
| மன்னார் | 02 |
| வவுனியா | 03 |
| கிளிநொச்சி | 04 |
| முல்லைத்தீவு | 05 |

குறிப்பு :-

நியமனத்திற்கு தெரிவு செய்யும் மாவட்டம் தொடர்பில் விண்ணப்பப் படிவத்தின் **14வது பந்தியில்** தவறாது பூரணப்படுத்தியிருத்தல் வேண்டும். மேலும், நியமனத்திற்கான மாவட்டத்தைத் தீர்மானித்ததன் பின்னர் அதனை மீண்டும் மாற்றம் செய்ய ஒருபோதும் அனுமதிக்கப்படமாட்டாது.

06.3 பந்தி 6.01 இல் பொருத்தமான வகுதியொன்றினுள் தெரிவு செய்யும் விண்ணப்பதாரர்கள் இவ்விளம்பரத்தின் மூலம் தேவைப்படுத்தப்பட்ட அடிப்படைத் தகைமைகளை பரீட்சார்த்திகள் கொண்டுள்ளார்களா என்பதை பரீட்சிப்பதற்கான பொது நேர்முகத்தேர்வுக்கு அழைக்கப்படுவர்.

06.4 பொது நேர்முகத்தேர்வின் மூலம் தகைமைகள் உறுதிப்படுத்தப்பட்ட பரீட்சார்த்திகள் தொழிற் பரீட்சைக்கு (Trade test) அழைக்கப்படுவர்.

06.5 எவ்வாறாயினும் மேற்படி தொழிற் பரீட்சையில் சித்தியடைந்த விண்ணப்பதாரர்கள், பிரிவு 6.01 இன் கீழ் குறிப்பிட்ட வகுதியொன்றின் கீழ் எழுத்துப்பரீட்சையில் பெற்ற மொத்தப்புள்ளிகளின் உயர்வரிசை ஒழுங்கில் நியமனத்திற்காக தெரிவு செய்யப்படுவர்.

## 07 பரீட்சைக் கட்டணம் :

விண்ணப்பதாரி, பரீட்சைக் கட்டணம் ரூபா. 500/- ஐ **"செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம்"** என்ற பெயருக்குக் கிடைக்கக்கூடியவாறாக வடக்கு மாகாணத்தில் அமைந்துள்ள பிரதேச செயலகமொன்றில் செலுத்தி, அதற்கான பற்றுச்சீட்டினை விண்ணப்பப் படிவத்தில் உரிய கூட்டினுள் கழராதவாறு ஒட்டி அனுப்புதல் வேண்டும். எக்காரணம் கொண்டும் இக்கட்டணம் மீளச் செலுத்தப்படமாட்டாது. இக் கட்டணத்தை வேறு ஏதும் பரீட்சைக்கு மாற்றவும் அனுமதி வழங்கப்படமாட்டாது.

## 08 விண்ணப்பிக்கும் முறை :

08.1 இவ்வறிவித்தலுடன் வெளியிடப்படும் விண்ணப்பப் படிவத்தினை www.np.gov.lk என்ற வடக்குமாகாண சபையின் உத்தியோகபூர்வ இணையத்தளத்திற்கு சென்று தரவிறக்கம் செய்து அதனை பூர்த்தி செய்து, **விண்ணப்ப முடிவுத் திகதி அல்லது அதற்கு முன்னர்** கிடைக்கக் கூடியவாறு, **"செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம், இல. 393/48, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்"** எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும்.

08.2 விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **"NP/07/10/01/210"** எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.

08.3 விண்ணப்பப் படிவத்தின் நிழற்படப்பிரதியை தம்வசம் வைத்துக்கொள்ளல் அவசியமாகும். எனினும் விண்ணப்பத்தின் புகைப்படப்பிரதி மற்றும் முன்னோடிப்பிரதி என்பன ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

08.4 பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகளினது விண்ணப்பப் படிவங்கள் கிடைத்தமை தொடர்பில் அறிவித்தல் எவையும் வழங்கப்படமாட்டாது. அத்துடன் விண்ணப்ப முடிவுத்திகதிக்கு முன்னர் கோரப்பட்ட தகைமைகளைப் பூர்த்தி செய்திராத விண்ணப்பங்கள் முன்னறிவித்தல் ஏதுமின்றி நிராகரிக்கப்படலாம்.

08.5 பரீட்சைக்கான அனுமதி அட்டை மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுச் செயலாளர் அவர்களினால் அனுப்பி வைக்கப்படும். **பரீட்சைக்கான அனுமதி அட்டை அனுப்பி வைக்கப்படலானது விண்ணப்பதாரி சகல தகைமைகளையும் கொண்டுள்ளார் எனக் கருதப்படலாகாது.**

08.6 விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரிகள் பரீட்சைத் திகதிக்கு குறைந்த பட்சம் 05 நாட்களுக்கு முன்னராவது அனுமதி அட்டை கிடைக்காவிடின், அனுமதி அட்டை கிடைக்காமைபற்றி, பின்வரும் விடயங்கள் உள்ளடங்கிய கோரிக்கைக் கடிதம் மூலம் **"செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம், இல. 393/48, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்"** எனும் முகவரிக்கு அறிவிக்க வேண்டும். (தொலைபேசி இல: 021 221 9939 / தொலைநகல் இல: 021 221 9940 / மின்னஞ்சல்: **exampscnp@gmail.com**)

- பரீட்சையின் பெயர்.
- விண்ணப்பதாரியின் முழுப்பெயர்.
- தேசிய அடையாள அட்டை இலக்கம்.
- விண்ணப்பதாரியின் அஞ்சல் முகவரி.
- விண்ணப்பதாரியின் மின்னஞ்சல் முகவரி.
- விண்ணப்பப் படிவத்தின் பிரதி.
- விண்ணப்பம் தபாலில் சேர்க்கப்பட்ட அஞ்சல் அலுவலகம், பதிவு இலக்கம், மற்றும் திகதி.
- பரீட்சைக்கட்டணம் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டின் சான்றுப்படுத்திய நிழற்படப்பிரதி.

## 09 ஆள் அடையாளத்தை நிரூபித்தல் :

09.1 பரீட்சார்த்திகள் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தங்களது ஆளடையாளத்தை நிரூபிக்குமாறு வேண்டப்படுகின்றனர். ஆளடையாளத்தை நிரூபிப்பதற்கு பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும்.

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆளடையாள அட்டை.
(ii) செல்லுபடியான இலங்கை கடவுச்சீட்டு.
(iii) செல்லுபடியான இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம்.

மேற்குறிப்பிடப்பட்ட ஆவணமொன்றை பரீட்சைக்கு தோற்றும்போது சமர்ப்பிக்கத்தவறும் பரீட்சார்த்தியொருவரின் பரீட்சார்த்தி உரிமை **"செயலாளர் மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம்"** அவர்களின் தற்றுணிவின்படி இரத்துச் செய்யப்படலாம். பரீட்சை நடாத்துதல் தொடர்பாக மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு செயலாளரினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் அமைந்தொழுக வேண்டும். அச்சட்டதிட்டங்களை மீறினால் மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு செயலாளரினால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாதல் வேண்டும்.

09.2 மேலும், பரீட்சார்த்திகள் அடையாளத்தை உறுதிப்படுத்தக்கூடியவாறு முகத்தையும், மற்றும் இலத்திரனியல் தொடர்பாடல் கருவிகளை அணியவில்லையென்பதை உறுதிப்படுத்துவதற்காக இரு காதுகளையும் மறைக்காமல் பரீட்சை மண்டபத்தில் நுழைதல் வேண்டும். மேலும் அவ்வாறு உறுதிப்படுத்துவதை நிராகரிக்கும் விண்ணப்பதாரர்கள் பரீட்சை மண்டபத்தினுள் அனுமதிக்கப்படமாட்டார்கள். மேலும் பரீட்சைமண்டபத்தினுள் நுழைந்த நேரத்திலிருந்து பரீட்சை முடிவடைந்து அதிலிருந்து வெளியேறும் வரையில் விண்ணப்பதாரியை அடையாளம் காணக்கூடிய விதத்தில் முகத்தையும் இரு காதுகளையும் மறைக்காமல் இருத்தல் வேண்டும்.

## 10 பொய்யான தகவல்களுக்கான தண்டனை :

விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்யும்போது மிகக்கவனத்துடன் சரியான தகவல்களை அளித்தல் வேண்டும். இப்பரீட்சை விதிகளின்படி எவரேனும் விண்ணப்பதாரியொருவர் பரீட்சைக்கு முன்னரோ பரீட்சையின்போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எச்சந்தர்ப்பத்திலாவது தகைமையற்றவர் எனத் தெரியவருமாயின், அவரது பரீட்சார்த்தியுரிமை அச்சந்தர்ப்பத்தில் இரத்துச் செய்யப்படும். விண்ணப்பதாரி சமர்ப்பிக்கின்ற ஏதேனுமொரு தகவல் பொய்யானதெனத் தெரியவரும் எச்சந்தர்ப்பத்திலும் அவர் மாகாண அரச சேவையிலிருந்து நீக்கப்படலாம்.

## 11 கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :

ஒவ்வொரு விண்ணப்பதாரியும் தமது கையொப்பத்தை உறுதிப்படுத்திக் கொள்வது கட்டாயமானதாகும். விண்ணப்பதாரிகள் அப்பகுதியின் கிராம சேவையாளர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, கடற்படை, தரைப்படை, ஆகாயப்படை ஆகியவற்றிலுள்ள ஆணைபெற்ற உத்தியோகத்தர், ரூபா. 854,880.00 க்குக் குறையாத தொகையை வருடாந்த திரட்டுச் சம்பளமாகப் பெறும் நிரந்தர அரசாங்க சேவை அல்லது மாகாண அரசாங்க சேவை உத்தியோகத்தர், மத பீடங்களுக்குப் பொறுப்பாகவுள்ள மதகுருமார் ஆகியோர்களில் ஒருவரால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

## 12 பரீட்சைத் திட்டம் :

இப்பரீட்சைகள் எழுத்துப் பரீட்சை, பொது நேர்முகப்பரீட்சை மற்றும் தொழிற்பரீட்சை (Trade test) எனும் பகுதிகளைக் கொண்டிருக்கும். எழுத்துப் பரீட்சையானது கீழ்க் குறிப்பிட்டவாறான வினாத்தாள்களைக் கொண்டிருக்கும் என்பதுடன், இப்பரீட்சைக்காக கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களுக்கு ஏற்ப தமிழ் மற்றும் சிங்களம் ஆகிய இரு மொழி மூலங்களில் நடாத்தப்படும். விண்ணப்பதாரர் ஒருவர் தமக்குரிய ஒரு மொழி மூலத்தை தெரிவு செய்ய வேண்டும் என்பதுடன், பரீட்சைக்குரிய அனைத்து வினாப்பத்திரங்களுக்கும் அந்த மொழி மூலத்திலேயே விடையளித்தல் வேண்டும். விண்ணப்பித்த மொழி மூலத்தை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

### 12.1 எழுத்துப் பரீட்சை :

| இல | வினாத்தாள் | வினாத்தாள் உள்ளடக்கம் | காலம் | மொத்தப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 01. | உளச்சார்பு | இவ்வினாத்தாளானது பரீட்சார்த்தியின் எண்கணித திறன், தர்க்க ரீதியாக முடிவெடுக்கும் திறன் மற்றும் பொது நுண்ணறிவு ஆகியன தொடர்பான அறிவைப் பரிசோதிக்கும் வகையிலான வினாக்களை உள்ளடக்கி இருக்கும். | 01 மணித்தியாலம் | 100 |
| 02. | மொழித் திறன் | இவ்வினாத்தாளானது பரீட்சார்த்தியின் புரிந்துகொள்ளும் திறன், எழுத்தாக்கம், மொழி, ஒத்தசொற்கள், எதிர்ச்சொற்கள், கடிதம் வரைதல் மற்றும் இலக்கண உபயோகம் ஆகியன தொடர்பான அறிவைப் பரிசோதிக்கும் வகையிலான வினாக்களை உள்ளடக்கி இருக்கும். | $01^{1}/_{2}$ மணித்தியாலங்கள் | 100 |

குறிப்பு :-

இப்பரீட்சை ஒரு போட்டிப் பரீட்சையாக இருப்பதால் நேர்முகத் தேர்விற்கு தகைமை பெறுவதற்காக ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும் ஒதுக்கப்பட்டுள்ள புள்ளிகளில் குறைந்தபட்சம் **நாற்பது (40%)** புள்ளிகள் பெறுவதுடன் இரு வினாப்பத்திரங்களுக்குமான கூட்டு மொத்தப் புள்ளிகளில் ஆகக்குறைந்தது **ஐம்பது வீதத்தை (50%)** பரீட்சார்த்திகள் பெற்றுக்கொள்ளல் வேண்டும். நேர்முகப் பரீட்சையின் போது விண்ணப்பதாரிகள் இப் போட்டிப் பரீட்சையில் பெற்ற கூட்டு மொத்தப் புள்ளிகளின் வரிசை ஒழுங்கு (Merit Order) கருத்தில் கொள்ளப்படும்.

### 12.2 பொது நேர்முகப்பரீட்சை :

எழுத்துப் பரீட்சையில் சித்தியடையும் பரீட்சார்த்திகள் பொது நேர்முகப்பரீட்சைக்கு உட்படுத்தப்படுவர். பொது நேர்முகப்பரீட்சையின் போது ஆட்சேர்ப்புக்கான அடிப்படைத் தகைமைகள் பரிசீலிக்கப்படும் என்பதுடன், இதன் பொருட்டு புள்ளிகள் எதுவும் வழங்கப்படமாட்டாது.

### 12.3 தொழிற் பரீட்சை :

பொது நேர்முகப்பரீட்சையில் தகைமை பெறும் பரீட்சார்த்திகள், பின்வருமாறான தொழிற்பரீட்சைக்கு உட்படுத்தப்படுவர் என்பதுடன், தொழிற் பரீட்சையில் குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு விடயப்பரப்பிலும் அவ்விடயத்திற்கு தேவைப்படுத்தப்பட்ட சித்திப்புள்ளிகளை பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

| இல | புள்ளிகள் வழங்கப்படும் விடயப்பருப்பு | உச்ச புள்ளிகள் | சித்திப் புள்ளிகள் |
|---|---|---|---|
| 01. | வாகனம் செலுத்துவதிலுள்ள தேர்ச்சி | 40 | 20 |
| 02. | நெடுஞ்சாலை விதிகள் தொடர்பான பிரயோக அறிவு | 40 | 20 |
| 03. | மோட்டார் பொறிமுறை தொடர்பான அடிப்படை அறிவு | 20 | 10 |
| | மொத்தம் | **100** | **50** |

குறிப்பு :-
பரீட்சார்த்திகள் தொழிற்பரீட்சையில் சித்தியடைந்திருந்தாலும் நியமனத்திற்காக தெரிவு செய்யும் போது எழுத்துப் போட்டிப் பரீட்சையில் பெற்ற உயர்புள்ளியின் வரிசையொழுங்கில் தெரிவு செய்யப்படுவர்.

## 13 பரீட்சை நிலையம் :

13.1 பரீட்சை நடாத்துவதற்கு உத்தேசிக்கப்பட்ட பரீட்சை நகரங்களும் அவற்றின் எண்களும் பின்வருமாறு,

| நகரம் | நகர எண் |
|---|---|
| யாழ்ப்பாணம் | 01 |
| மன்னார் | 02 |
| வவுனியா | 03 |
| கிளிநொச்சி | 04 |
| முல்லைத்தீவு | 05 |

13.2 ஒரு பரீட்சை நகரம் சார்பாகக் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களின் எண்ணிக்கை குறையுமிடத்து இப்பரீட்சையானது, அண்மையிலுள்ள பரீட்சை நகரத்திற்கு அல்லது மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவால் தீர்மானிக்கப்படும் நகரத்திற்கு மாற்றப்படலாம்.

## 14 பரீட்சைப் பெறுபேறுகள் :

பரீட்சார்த்திகளுக்கான முழுமைப்படுத்தப்பட்ட பரீட்சைப் பெறுபேறுகள் வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு செயலாளர் அவர்களால் **www.np.gov.lk** என்ற வடக்கு மாகாண சபை இணையத்தளம் மூலம் வெளியிடப்படும் என்பதோடு, தமது தனிப்பட்ட பரீட்சைப் பெறுபேற்றுச் சான்றிதழையும் **www.np.gov.lk → Exams & Recruitments → Results** எனும் தொடர்பின் ஊடாக பார்வையிட்டு தரவிறக்கம் செய்துகொள்ள முடியும்.

கவனிக்கவும் :-

(i) இப்பரீட்சை அறிவித்தல் மூலம் ஏற்பாடு செய்யப்படாத எவ்விடயம் தொடர்பாகவும், வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுச் செயலாளரின் தீர்மானமே இறுதியானதாகும்.

(ii) இப் பரீட்சையை நடாத்துதல் அல்லது இரத்து செய்தல் தொடர்பான அதிகாரம் வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுச் செயலாளருக்கு உண்டு.

(iii) இவ் அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பில் ஏதேனும் தெளிவுபடுத்தல்கள் வேண்டுமென எதிர்பார்க்குமிடத்து, வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் பரீட்சைப் பிரிவின் 021 221 9939 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

(iv) இவ் அறிவித்தலில் தமிழ் மற்றும் சிங்களம் ஆகிய மொழி உரைகளுக்கிடையில் ஏதேனும் வேறுபாடு காணப்படும் பட்சத்தில், தமிழ் மொழி உரையே மேலோங்கும்.

(v) இப் பரீட்சை தொடர்பான அறிவித்தலினை **www.np.gov.lk** என்ற வடக்கு மாகாண இணையத்தளத்திலும் பார்வையிடலாம்.

ஆழ்வாப்பிள்ளை சிறி
செயலாளர்
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு
வடக்கு மாகாணம்

ஆழ்வாப்பிள்ளை சிறி,
செயலாளர்,
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு,
வடக்கு மாகாணம்.
2025.12.24